Digitization by eGangotri-South Center

Sri Hari

மஹாமந்திரம்

Hare Rama Hare Rama Rama Rama Hare Hare
Hare Krishna Hare Krishna Krishna Krishna Hare Hare

மதுரை ராஜேஷ்

ஸ்ரீ ஸ்ரீ முரளிதர சுவாமிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதன்

மற்றும் ஸ்ரீஸத்குருநாதரின்

பாதகமலங்களில் சமர்ப்பணம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலியில் எல்லோருக்கும் இறை நாம கீர்த்தனமே கதி என்று ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதற்கொண்டு, பல அவதார புருஷர்களும் மஹான்களும் வலியுறுத்தி வந்துள்ளனர். அவ்வண்ணமே நமது குருநாதரான மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களும் மஹாமந்திரம் ஒன்றையே இகபர சௌக்யம் அருளக்கூடியது என்று உபதேசித்து வருகின்றார்கள்.

மஹாமந்திரம் கலியுகத்திற்கு மிகவும் பிரத்யேகமானது என்பதற்கு ஆதாரமாக இருக்கும் கலிஸந்தரண உபநிஷத் பறைசாற்றும் பல விஷயங்களை நம் குருநாதர் பன்முறை தமது அருளுரைகளில் கூறியுள்ளார்.

அவற்றிலிருந்து மிக முக்கியமானவற்றை மட்டும், பலரும் அறிந்து பயனுற வேண்டும் எனும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நோக்குடன், இந்த சிறிய கையேட்டில் தொகுத்து வழங்குகிறோம்.

ராதே ராதே!

சைதன்ய மஹாபிரபு
நாமபிஷா கேந்திரா
சென்னை-83

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீஹரி:

ஹரே ராம ஹரே ராம

ராம ராம ஹரே ஹரே

ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண

க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

ஸ்ரீநாராயணனை கூப்பிடும் மந்திரம் இது. இதில் பதினாறு பெயர்கள் உள்ளன. ஒவ்வொரு வார்த்தைக்கும், வெவ்வேறு அர்த்தங்கள் உள்ளன. ஒவ்வொரு ஜீவனுக்கும் 16போர்வைகள் உள்ளன. இவை ஒன்றன் மேல் ஒன்றாக ஜீவனை மூடி வைத்திருக்கிறது. ஸமஸ்க்ருதத்தில் இதற்கு 'ஆவரணம்' என்று பெயர். மேலே மூடி இருப்பது 'ஆவரணம்'. 'ஷோடச' என்றால் 16. இந்த 16 ஆவரணங்களையும் நீக்கி, ஜீவனுக்கு ஆனந்தத்தை கொடுக்க வல்லது இந்த கலி ஸந்தரண மஹாமந்திரம். அதைக் கூறுகிறது இந்த உபநிஷத்வாக்கியம்:-

இதி ஷோடஶ கலா ஆவ்ருதஸ்ய

ஜீவஸ்ய ஆவரண விநாஶனம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேகம் விலகியதும், சூரியன் பிரகாசிப்பது போல, ஜீவனை சூழ்ந்திருக்கும் ஆவரணங்கள் விலகியதும், ஹிருதயத்தில் ஜொலிக்கின்ற பகவத்ரூபத்தை கண்டு களிப்பதே, ஜீவனின் ஆனந்தம். இதை கொடுக்க வல்லது இந்த மந்திரம்:-

தத: ப்ரகாஶதே பரம்-ப்ரஹ்ம
மேகாபாயே ரவி ரஶ்மி மண்டலீவ I இதி II

சொற்கள் ஒன்றே ; ஆயின் அர்த்தங்கள் வேறு.

இந்த மந்திரத்தில், "ராம" என்னும் சொல் நான்கு தடவையும் "க்ருஷ்ண" என்னும் சொல் நான்கு தடவையும் "ஹரி" என்னும் சொல் எட்டு தடவையும் வந்துள்ளன. ஆக மொத்தம் 16 சொற்கள் கொண்டது இந்த மந்திரம். மந்திர சாஸ்திரம் கூறும் முறைப்படி, ஒரே சொல் பல அர்த்தங்களை குறிக்கும். இந்த மந்திரத்திலுள்ள ஒவ்வொரு நாமம் (அ) பெயரை உச்சரிக்கும்பொழுது, அதற்கு உண்டான பகவத் சக்தியை குறிக்கிறோம். ஒவ்வொரு பெயரும் கூட

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

"இப்பேர்ப்பட்ட சக்தி வாய்ந்த ஸ்வாமியே!, நீ என்னிடம் வருவாயாக" என்று அழைக்கின்றது. "ஹரே" என்றால் "ஓ! ஹரியே" என்று கூப்பிடுவதற்கான அர்த்தம். அது போல் "ராம" என்றால் "ஓ ராமனே", "க்ருஷ்ண" என்றால் "ஓ க்ருஷ்ணனே" என்று அந்த நாராயணனை அழைப்பதாக அர்த்தம்.

மந்திர சக்தி

இந்த மந்திரத்தில் ஒரு பெயரை ஒரு தடவை கூப்பிடும்பொழுது ஒரு அர்த்தம். அதே பெயரை மறுபடி கூப்பிடும்பொழுது வெவ்வேறு அர்த்தம். கூப்பிடும்பொழுது (இந்த மந்திரத்தை சொல்லும் பொழுது) அந்தந்த அர்த்தத்தை மனதில் கொண்டு, அந்தந்த மனோபீஷ்டத்தை நிறைவேற்றுகிறான் ஸ்வாமி. இதைத்தான் மந்திர சக்தி என்கிறார்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மஹாமந்திரத்தில் 16 அர்த்தங்கள்

1. ஹரே - மறு பிறவியை பறிப்பவனே, நீ வருவாயாக!
2. ராம - ஸ்வரூப ஆனந்தத்தை தருபவனே, நீ வரவும்!
3. ஹரே - கேடுகளை களைபவனே, நீ வா!
4. ராம - என்னை மகிழ்விப்பவனே, சீக்கிரம் நீ வருவாய்!
5. ராம - ஸ்வரதனே - உன் சுகத்திற்காக (லக்ஷ்மி தேவி) தேவை என்று இல்லாமல், உன் சுகத்திற்கு நீயே காரணமாக உள்ளவனே, நீ வரவும்!
6. ராம - லக்ஷ்மி தேவியை மகிழ்விப்பவனே நீ வா!
7. ஹரே - எனது லிங்க தேஹத்தை அழித்து, என்னை ஆட்கொள்ளும் நீ, எங்கு இருந்தாலும் வா!
8. ஹரே - என் மனதை அபஹரித்து, உள்ளே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருக்கும் அசுத்தத்தை போக்கடிப்பவனே, நீ வா!

9. ஹரே - என் மனதில் இருக்கும் பெரும் சுமையை களைபவனே, நீ வந்தருள்வாயாக!

10. க்ருஷ்ண - பூர்ண பலிஷ்டனே, நீ வர வேண்டும்!

11. ஹரே - ஆனந்தமே ஒரு உருவம் ஏற்று நிற்குமேயானால் அது எப்படி இருக்குமோ, அந்த ஆனந்த வடிவம் நீ. சீக்கிரம் வா!

12. க்ருஷ்ண - எந்த அக்ஞானத்தின் காரணமாக நான் உன்னை அறியாமல் வாழ்கிறேனோ அந்த அக்ஞானத்தை அழிப்பவனே, நீ வர வேண்டும்!

13. க்ருஷ்ண - கண்ணைக் கவரும் அழகான மேகச்யாமள மூர்த்தியே! நான் உன்னை காண வேண்டும்!

14. க்ருஷ்ண - எனது பாவங்களையெல்லாம் வேரோடு களைந்து எறிய, நீ ஒருவனே சக்தி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாய்ந்தவன். சீக்கிரம் நீ வந்தருள்வாயாக!

15. ஹரே - லக்ஷ்மி தேவிக்கு மிகவும் மனோஹரமாக இருப்பவனே, நீ எனக்கு அருள் புரிய வேண்டும்!

16. ஹரே - என் இதயத்தில் எப்போதும் நின்று, என்னை ஆட்கொண்டு, பரமானந்தத்தை எனக்கு அளிப்பவனே, இப்போதே நீ எனக்கு தேவை. நீ எங்கிருந்தாலும் வர வேண்டும்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மஹாமந்திரத்தின் ஆற்றல்

வாழ்க்கையில் தோன்றும் கஷ்டங்களிலிருந்து விடுபட இந்த மந்திரத்தை தவிர வேறு உபாயம் இல்லை என்று உபநிஷத் வாக்கியம் இவ்வாறு கூறுகிறது:-

இதி ஷோடசகம் நாம்னாம்
கலி-கல்மஷ நாஸனம்
ந-அதப்-பர-தர உபாய:
ஸர்வ வேதேஷு பட்யதே

ஆகவே இந்த மஹாமந்திரத்தை தினமும் பக்தியுடன் ஜபித்து வந்தால் சர்வ மங்களங்களும் உண்டாகும் என்பது உபநிஷத் வாக்யத்தின் தாத்பர்யம்.

மன அமைதியின்மை, ஆரோக்கியமின்மை, வியாபாரத்தில் நஷ்டம், திருமண தடங்கல், குழந்தையின்மை, உத்தியோகமின்மை, பணத்தட்டுப்பாடு ஆகிய துன்பங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மஹாமந்திர கீர்த்தனத்தினால் சூரியனை கண்ட பனி போல் விலகும் என்பது கண்கூடு. அகால மரணமுற்றோருக்கு சாந்தியை தர வல்லது.

மஹாமந்திர கீர்த்தனம் செய்பவரை நவக்கிரஹங்களும் ஒன்றும் செய்யாது. மஹாமந்திர கீர்த்தனம் செய்து வந்தால், முதாதையரும் சாந்தி அடைவர்.

இவை தவிர இந்த மந்திரத்தை ஜபித்து வருவோர்க்கு செல்வம் கொழிக்கும். வியாதிகள் அண்டா. வாழ்க்கையில் இறைவன் அருளால் மகிழ்ச்சி தாண்டவமாடும். வியாபாரம் அபிவிருத்தியாகும்.

நமக்கு மட்டுமின்றி நம்மை சார்ந்தவருக்கும், உறவினர்க்கும் நன்மைகளை வாரி வழங்கும். மனதில் எப்பொழுதும் சாந்தி நிலவும். மனம் வளமும் பலமும் பெறும்.

நாட்டில் நன்கு மழை பெய்யும். பூமி செழிக்கும். நாடு வளம் பெருகும். வன்முறை அறவே நீங்கி உலகில் அமைதி ஓங்கும். உலகளாவிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகோதரத்துவம் மலரும். உலகம் உய்யும். அபரிமிதமான ஆன்மீக முன்னேற்றம் எளிதில் ஏற்படும். எல்லோருக்கும் எளிதில் இறையருள் கிட்டும். எல்லோருக்கும் குருவருளும் இறையருளும் ஸத்ஸங்கமும் கிட்டும்.

இம்மந்திரத்தை சிரத்தையுடன் தவறாது கீர்த்தனம் செய்து வருவோரை கண்ணபிரானே முன்னிருந்து வழிநடத்தி காப்பாற்றுவான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளிய மஹாமந்திர கீர்த்தனை

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

1. கலியையும் பலி கொள்ளும் – துளி நியமுமில்லாத
கீர்த்தனம் பாடீரே! கீர்த்தனம் பாடீரே! (ஹரே ..)

2. ஈரெட்டாவரணத்தை நீக்கியே முக்தி நல்கிடும்
ஈரெட்டு சொற்கள் கொண்ட கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

3. மண்ணுலக ஆசைகளும் விண்ணுலக
ஆசைகளும்
கணப்பொழுதில் நல்கிடும் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

4. பொருளோ செலவில்லை! எனினும், அருளோ
குவிந்திடும்
கருவில் வராது காக்கும் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5. பண்டிதன் முதற்கொண்டு பாமரன் வரையிலும்
அண்டிப் பிழைத்திடும் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

6. வாரி இறைத்தாலும் ரத்தினம் ரத்தினமே
அருமையில் அருமையான கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

7. உலக மக்கள் உய்ய ஓர் வழி கண்டாரே!
அவல நிலை போக்கும் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

8. யோகமும் யாகமும் தீர்த்தமும் தெய்வமும்
குடிகொண்ட நாமத்தை கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

9. சிதாகாசந்தனில் மிளிர்ந்திடும் நாமமாம்!
யோக சித்தி நல்கிடும் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

10. பாடிடும் பக்தரையும் பாடிடும் தலத்தையும்
பாவனமாக்கிடும் கீர்த்தனம் பாடீரே! (ஹரே ..)

11. பறவை, விலங்கினம், புல், பூண்டு ஒன்றின்றியே
பரகதி நல்கிடும் கீர்த்தனம் பாடீரே! (ஹரே ..)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

12. தேவரும் தெரிவரே! தெய்வமும் பேசுமாம்!
உலகம் வணங்கிடும் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

13. உலகமறியச் செய்வேன் என சபதமும் செய்தாரே!
அவர் சபதம் நிறைவேற கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

14. உணவு மாறிடினும் நீரினில் மாற்றமுண்டோ!
நீர் போன்று ஆதாரமாம் கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

15. இருந்த இடத்தில் இருந்தபடியே
வருவினை மாற்றிடும், கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

16. சைதன்ய தேவரும் நித்யானந்தரும்
பக்தி வெள்ளம் பாய்ச்சிய கீர்த்தனம் பாடீரே!
(ஹரே ..)

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறை நாமம் சொல்வது நமக்கும் நன்மை செய்யும்;
வீட்டிற்கும், நாட்டிற்கும், உலகத்திற்கும் நன்மை செய்யும்;
தெய்வத்தின் பலமும் வெளிப்படும்

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா
51, 7வது அவென்யூ, அசோக்நகர், சென்னை - 600 083
தொலைபேசி - +91 44 24895875
மின்னஞ்சல்:contact@namadwaar.org/contact@madhuramurali.org
இணையதளம்:www.namadwaar.org/www.madhuramurali.org

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.